**தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை**

ஆலோசனைச் சுற்றறிக்கை 2004/நூல/02(அ)(திருத்தம் 2025)

**கலாச்சார மத்திய நிலைய நூலகங்களில்**
**"ஒக்டோபர் - தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித்திட்டம்" இனை நடைமுறைப்படுத்தல்**

## 01. அறிமுகம்

2004 ஆம் ஆண்டு முதல் ஒக்டோபர் மாதத்தினை தேசிய வாசிப்பு மாதமாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. அதன்படி, 2025 ஒக்டோபர் மாதத்தின் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்குமுகமாக **விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்** மற்றும் **செயற்திட்டங்களை** நடைமுறைப்படுத்துமாறு சகல கலாச்சார மத்திய நிலைய நூலகங்களும் வேண்டப்படுகின்றன. **"மறுமலர்ச்சிக்காக வாசிப்போம்."(Let's read for a revival)** என்ற தொனிப்பொருளில் இந்த ஆண்டின் தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சிகள் செயல்படுத்தப்பட உள்ளன.

## 02. வாசிப்பு

"வாசிப்பு" என்பது பொதுவாக நூல்களை வாசித்தல் என்றே கருதப்படுகின்றது. ஆனால் வாசித்தல் என்பது ஒரு பரந்த அர்த்தத்தை தரக்கூடிய ஒரு செயன்முறையாகும். அதன் கீழ் தகவல் தேடல், அறிவு, பொழுதுபோக்கு, ஆய்வு நடவடிக்கைகளுக்காக புத்தகங்கள் போன்ற அச்சிடப்பட்ட சாதனங்கள் மூலம் வாசிப்பது என்பதுடன், இணையம், கட்புல செவிப்புல சாதனங்கள் ஊடாக வாசிப்பது ஆகியவையும் இதில் உள்ளடங்கும். திறந்த மனதுடன் நாடகமொன்றை இரசித்தல், இயற்கையை இரசித்தல் என்பனவும் கூட வாசிப்பேயாகும். வாசிப்பானது அறிவின் அடிப்படையில் மாத்திரமன்றி, கற்பனை சக்தி, புத்தாக்கம், மதிநுட்பம் போன்றவற்றின் அடிப்படையிலான உணர்வுபூர்வமான, இரசனைத்திறன் மிக்க மனித சமூகமொன்றை உருவாக்குவதில் செலுத்திய பங்களிப்பு அளப்பரியது.

சில தசாப்த காலமாக தனி மனிதனாகவும், சமூகமாகவும் வாசிக்கும் பழக்கம் தூரமாகிக் கொண்டே வருகின்றது. ஏதோ ஒரு துறையிலிருந்து மனித வாழ்க்கைக்கு கிடைக்கின்ற பிரயோசனமான வாசிப்புக்குப் பதிலாக, நவீன தொலைத் தொடர்புத் தொழில்நுட்பத்தின் செல்வாக்கு காரணமாக அதன் மேமெழுந்தவாரியான வாசிப்பில் திளைத்திருத்தல் மட்டுமன்றி அடிமைப்படுதல் தற்கால சமூகத்தின் முன்னேற்றத்திற்கு தீய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. வளமான நாடு என்ற வகையில் பரிபூரண அபிவிருத்தி நோக்கி நகர்கின்ற பயணத்தில் அறிவுடைய, புத்திக்கூர்மையான, கலாசார பெறுமதி மிக்க சமூகமொன்றை கட்டியெழுப்பதற்காக வாசித்தல் என்பதை செயற்திறன் மிக்க வகையிலும் பிரயோசனம் வாய்ந்த வகையிலும் பயன்படுத்துவது அதி முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

## 03. செயற்திட்டக் குழு

இங்கு நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பதற்காக பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேசிய வாசிப்பு மாத செயற்திட்டக் குழுவொன்றை நியமிப்பது பொருத்தமானதாகும். ஏற்கனவே நூலகக் குழுவொன்று இருந்தால் இக்குழு மூலமாகவும் வாசகர் சமூகத்தின் பங்கேற்பின் மூலமும் இப் பணியைச் செய்ய முடியும். இதற்கான பிரதான வழிநடத்தல் குழுவொன்றை நியமிப்பதும் பொருத்தமான அதன் அமைப்பு பின்வருமாறு அமைதல் வேண்டும்.

- நிலைய பொறுப்பதிகாரி - குழுத்தலைவர்
- நூலக பொறுப்பாளர் - செயலாளர்
- வாசக சமூகத்தின் இரண்டு உறுப்பினர்கள்

PDF Scanner ACE Scanner

## 04. செயற்படுத்தக் கூடிய நிகழ்ச்சித் திட்டங்கள்

வாசிப்பு மற்றும் அது தொடர்புடைய சேவைகளை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதே நூலகமொன்றின் பிரதான தொழிற்பாடாகும். அதன் கீழ் நூலகமொன்றினால் மேற்கொள்ளப்படும் தினசரிப் பணிகளுடன், மேலதிகமாக பின்வரும் பணிகளை மேற்கொள்வதையும், பிரச்சாரம் செய்வதையும் வலியுறுத்துகிறோம்.

- வாசிப்பை ஊக்குவிப்பதற்கான ஒரு இணையதளப் பக்கத்தை உருவாக்குதல்.
- நூலகத்துடன் இதுவரை தொடர்பில்லாத வாசகர்களை இனங்கண்டு அவர்களை தொடர்புபடுத்தும் வகையிலான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தலும், அங்கத்துவம் வழங்கலும்.
- தகவல் அறிவு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- பொது மக்களின் இரசனையை வளப்படுத்தும் வகையில் இரசனையூட்டும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.
- மாணவர்களின் இரசனையூட்டும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.
- இலக்கிய விருது பெற்ற நூல்களை தெரிவு செய்து அவற்றை மையமாக வைத்து திறந்த இரசனையூட்டும் நிகழ்ச்சிகள் / விமர்சனப் போட்டிகள், சித்திரப் போட்டிகள் என்பவற்றை ஏற்பாடு செய்தல்.
- "நூலிற்காக ஒரு நேரம்" என்ற மகுடத்தின் கீழ் வாசகருக்கு ஒரு புத்தகத்தை வாசிக்க ஒரு குறிப்பட்ட திகதி, மற்றும் நேரத்தை வழங்குவதற்கான திட்டங்களை ஏற்பாடு செய்தல்.
- வாசிப்பு முகாம்களை நடாத்துதல்.
- "வாசிப்போம் வெற்றி பெறுவோம்" என்ற கருப்பொருனிள் கீழ் வினா விடை நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்.
- சிறந்த வாசகர்களை தெரிவு செய்யும் நிகழ்ச்சிகள், போட்டிகளை நடாத்துதல்.
- கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது தினசரி நூலகப் பயன்பாட்டை அதிகரித்தல்
- பிற ஆக்கபூர்வமான வாசிப்பு ஊக்குவிப்புத் திட்டங்களை நடாத்துதல்.
- பொருத்தமான இதர நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துதல்.

## 05. நிதி

இதற்காக அதிக நிதி முதலீடு செய்ய வேண்டிய அவசியமில்லை. நிதி ஒதுக்கீடு தொடர்பாக கலாசார மத்திய நூலகம் மூலம் மேற்கொள்ளப்படலாம்.

## 06. அறிக்கை தயாரித்தல்

மேற்கொள்ளப்பட்ட சகல நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக தெளிவான, முறையாக தயாரிக்கப்பட்ட அறிக்கையினை நிலையத்தின் பொறுப்பாளரின் சிபாரிசுடன் **2026 பெப்ரவரி மாதம் 28ஆந் திகதியன்று** அல்லது அதற்கு முன்னர் **பிரிவுத் தலைவர், விரிவாக்கற் சேவைகள் பிரிவு, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இல. 14, சுதந்திர வழி, கொழும்பு 07** எனும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

வெற்றி பெறும் நூலகங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான அடிப்படையான அறிக்கையினைத் தயாரிக்கும் போது, மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் உட்பட வாசிப்பை ஊக்குவிக்கும் முகமாக மேற்கொள்ளப்பட்டத் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கலாச்சார மத்திய நிலைய நூலகங்களில் இதற்கான போதுமான பணியாளர்கள் இல்லையென்றால், குறைந்தபட்சம் ஒரு சில திட்டங்களையாவது பொருத்தமான முறையில் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அறிக்கையைத் தயாரிக்கும் போது அதன் வெளிப்புற அட்டை / புத்தகத்தை கட்டுதல் என்பவற்றிற்காக மேலதிக நேரத்தையும் பணத்தையும் செலவிடத் தேவையில்லை. நூலகத்தால்

PDF Scanner ACE Scanner

தேசிய வாசிப்பு மாதத்தின் தொனிப்பொருளுக்கு அமைவாக செய்யப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட வருடம் முழுவதும் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் தகவல்களை தனித்தனியான **புகைப்படங்களுடன் மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய ஏனைய ஆதாரங்கள்/புள்ளிவிபரத் தரவுகள்** உள்ளடங்களாக முறையான வகையில் முன்வைத்தல் போதுமானதாகும்.

**07. மதிப்பீடு**

தேசிய வாசிப்பு மாதம் 2025 இல் வினைத்திறன் மிக்க நிகழ்ச்சித் திட்டங்களை முன்கொண்டு சென்ற கலாச்சார மத்திய நிலைய நூலகங்களுக்கு 2026 ஆம் ஆண்டில் இடம்பெறும் தேசிய வாசிப்பு மாதத்தின் தேசிய விழாவின் போது விருதுகளும் சான்றிதழும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வெற்றி பெறும் கலாச்சார மத்திய நிலைய நூலகங்களும் மற்றும் பாராட்டுப் பெறும் நூலகர்களை தெரிவு செய்வது தொடர்பாக தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் முடிவு இறுதியானது. ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் நூலக உத்தியோகத்தர்கள்/ஊழியர்களை பாராட்டும் நிகழ்வும் 2026 வருடத்தில் இடம்பெற இருக்கிறது.

கலாநிதி ரத்ன ஸ்ரீ விஜேசிங்க
தலைவர்

Dr. Rathna Sri Wijesinghe
Chairman
National Library and Documentation Services Board
No. 14, Independence Avenue,
Colombo 07.

தொடர்புகளுக்கு – தொலைபேசி இலக்கம் - 0112-688855
தொலைநகல் - 0112-685201
மின்னஞ்சல் - libdev@mail.natlib.lk
இணையதளம் - www.natlib.lk

PDF Scanner ACE Scanner